திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : சென்னை நகரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அச்சகத்துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன்பாக வைத்து மற்றத் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் தங்களுக்கும் தரப்பட வேண்டுமென்று வேண்டியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும், போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியமும், சலுகைகளும் அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது அச்சகத்தைப்பற்றிய கேள்வி தானே ஒழிய அச்சகத் தொழிலாளர்களைப்பற்றிய கேள்வியல்ல. இருந்தாலும் கூட பதில் சொல்கிறேன். பல்வேறு துறையினர் செய்கின்ற வேலையைப் பிரித்துப் பார்த்து அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள். ஆகவே தேவையில்லை என்று அரசு நினைக்காது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவற்றை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள்

* வினா எண் 59 திரு எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் அதிகாரப்பற்றற்ற (Non-officials) உறுப்பினர்கள் எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஏழு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) நிர்வாகக் குழு உறுப்பினர்களில் அதிகாரப் பற்றற்ற (Non-officals) உறுப்பினர்கள் இல்லை.

திரு எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள், எல்லாத் திட்டங்களுமே நட்டத்தில் தான் இருக்கின்றன.

1981 ஆகஸ்ட் 25]

காரணம் கைத்தறித்துறையில் அனுபவம் பெற்றவர்கள் அதிகார பற்றற்ற உறுப்பினர்களாக அந்தக் குழுவிலே இல்லை. அவர்கள் இருந்து நல்ல ஆலோசனைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. அவர்களுடைய ஆலோசனை இருந்தால் நட்டத்தை சரிக்கட்ட முடியும். அந்தக் குழுவிலே இனிமேலாவது கைத்தறித் துறையில் அனுபவம் பெற்ற அதிகாரப்பற்றற்ற உறுப்பினர் களை அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : இந்தக் குழுவிலே இப்போது நல்ல அனுபவம்பெற்ற அதிகாரிகளே இருக்கிறார்கள். தனியார்களும் சேர்க்கப்பட வேண்டுமென்ற உறுப்பினரின் உணர்வை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா ? அல்லது மாஸ்டர் வீவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு நெசவாளர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாஸ்டர் வீவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்வதில் இதுவரையில் சீலிங் ஏதோ இருந்ததாகவும் அண்மை யிலே மத்திய சர்க்கார் அதை எடுத்திருப்பதாகவும் சொல்லப் படுவது உண்மையா ? ஆமெனில் இதுவரையில் இருந்துவந்த ரிபேட்டை கூடுதலாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு யாதொரு சீலிங்கும் இல்லை. எவ்வளவு அதிகபட்சமாக முடியுமோ அவ்வளவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களுக்குக் குழுக்கள் போடும் பொழுது மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெறவேண்டி உள்ளதா ? அல்லது மாநில சர்க்காரே தன்னிச்சையாகச் செயல்பட முடியுமா ?

மாண்புமிகு திரு எஸ். என், இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மத்திய சர்க்காரின் ஆலோசனை பெறுவதிலிருந்து விடுபட்டு மாநில சர்க்கார் அதை நியமனம் செய்து வருகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நேரத்தில், ஏற்றுமதியை அதிகமாக ஆக்க வேண்டுமேயானால் அதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். வெளிநாடுகளிலே நல்லி, ராதா சில்க் ஆடைகளுக்குக் கிராக்கியிருக்கிறது. The design is more impotant than production. ஆகவே, இப்படித் தனிப்பட்ட நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை ஏற்றுமதியை அதிகமாகச் செய்கின்றவர்களை இந்தக் குழுவிலே சேர்த்துக் கொண்டு ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தனியார்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட, கைத்தறி இன்றைக்கு அகில உலகத்திலும் பெயரும் புகழும் பெற்றிருப்பதால் அதிகாரிகள் அந்தக் குழுவிலே நியமிக்கப்படுகிறார்கள். நெசவாளர்களையும் சேர்க்கின்ற முடிவைப்பற்றிப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் யார் யார்? மாஸ்டர் வீவர்கள் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்களா? அல்லது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள்:

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தலைவர்; தனி அதிகாரி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்—உபதலைவர்; மத்திய அரசு கைத்தறி விஸ்தரிப்பு ஆணையாளரின் பிரதிநிதி; மாநில அரசின் பிரதிநிதி (தொழில்துறை); தனி அதிகாரி, மத்திய கூட்டுறவு வங்கி; உதவி இயக்குநர் (கைத்தறி மற்றும் துணிநூல்); நிர்வாக இயக்குநர், ஏற்றுமதி வளர்ச்சித் திட்டம்.